# தைத்திருநாள்

எல்லோராலும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்து கொண்டாடப்படும் நாள் தைத்திருநாள். இந்நாளே தமிழரது புத்தாண்டு நாளுமாகும். தைத்திருநாளை உழவர்திருநாள், தைப்பொங்கல் திருநாள் என்றும் அழைப்பர். இயற்கையைப் போற்றிவாழ்ந்த தமிழரது உயர்ந்த சிந்தனையில் உருவானதே இத்திருநாள். மழை பெய்வதற்கும் பயிர்கள் செழிப்பதற்கும் உணவுப்பொருட்கள் விளைவதற்கும் மூலகாரணமான கதிரவனைப் போற்றி நன்றி கூறும் நாளே தைப்பொங்கல். தைத்திங்களின் முதல் நாளை வாழ்வின் இன்பம் சேர்க்கும் நாளாகக் கொண்டாடினர் தமிழர்.

பொங்கல் அன்று வைகறையில் எழுந்து நீராடிப் புத்தாடை புனைவர். முற்றத்தில் கோலம் போட்டு மாவிலை தோரணம் கட்டுவர். புதுப்பானையில் பொங்கல் பொங்குவர். இவ்வேளை கதிரவன் காலிக்கும்போது தலைவாழை இலையில் பொங்கலோடு முக்கனிகளும் பண்ணியங்களும் சேர்த்துப் படைத்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து கதிரவனை வணங்குவர். பின்னர் சுற்றத்தாருடன் சேர்ந்து பொங்கலை உண்டு மகிழ்வர்.

வயல்களை உழுவதற்கு மாடுகள் பயன்படுத்தப்பட்டன. இன்றும் மாடுகளிலிருந்து பல பயன்களைப் பெறுகின்றோம் அதனால் தமிழர் மாடுகளைப் போற்றி தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பொங்கலைக் கொண்டாடுவர். அன்று மாடுகளை நீராட்டி மாலை அணிவித்து அழகுபடுத்திப் பொங்கல் பொங்கி மாடுகளுக்கு உண்ணக் கொடுத்து மகிழ்வர். இத்திருநாளில் விருந்தோம்பல், நன்றி கூறுதல் என்ற தமிழர் பண்பாடுகள் மேலோங்கி நிற்பதைக் காணலாம்.